அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

44 T I

## முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
## First Term Test - Grade 12 - 2018

சுட்டெண் : ......................

இஸ்லாம் I
Islam I

காலம் : 2 மணி

- **1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4, 5 என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்றான “ஸமீஉன்” என்பதன் கருத்து
   1. யாவற்றையும் பார்ப்பவன் 2. யாவற்றையும் கேட்பவன் 3. யாவற்றையும் படைத்தவன்
   4. அருள்பாலிப்பவன் 5. அதிபதி

2. பனூஇஸ்ரவேலர்களின் கொடுமையில் இருந்து பாதுகாப்பதற்காக வானத்தின்பால் உயர்த்தப்பட்ட நபி
   1. முஹம்மது நபி (ஸல்) 2. இப்றாஹிம் (அலை) 3. மூஸா (அலை)
   3. தாவூத் (அலை) 5. ஈஸா (அலை)

3.. கழா என்பதன் மொழிரீதியான கருத்துக்களில் ஒன்று
   1. பூர்த்தியாக செய்தல் 2. நிர்ணயித்தல் 3. மட்டிடுதல் 4. பின்பற்றுதல் 5. நம்பிக்கை

4.. ஆன்மீக உலகை சார்ந்தோராக கருதப்படுபவர்கள்
   1. மனிதர்கள் 2. ஜின்கள் 3. மிருகங்கள் 4. பௌதீக வளங்கள் 5. நபிமார்கள்

5. மறுமைநாள் அதன் தொழிற்பாடுகளை வைத்து பல பெயர்களால் அழைக்கப்படும். அதில் “எழுப்பப்படும் நாள்” என்பதை குறிக்கும் சொல்
   1. யௌமுல் ஹஷ்ர் 2. யௌமுத்தீன் 3. யௌமுல் ப.்.ஸ்
   4. யௌமுல் ஹிஸாப் 5. யௌமுல் ஆகிர்

6. ளுஹரையும் அஸரையும் அஸருடைய நேரத்தில் பிற்படுத்தி சேர்த்து தொழுதல்
   1. ஜம்உ கஸ்ர் 2. ஜம்உ 3. கஸ்ர் 4. ஜம்உ தக்தீம் 5. ஜம்உ த.்.கீர்

7. போலி நபிமார்கள் “காதம்” எனும் சொல்லிற்கு கொடுக்கும் விளக்கம்.
   1. இறுதி 2. சிறப்பு 3. ஆரம்பம் 4. முடிவு 5. பதவி

8. மு.்.தஸிலா என்ற இயக்கத்தை ஆரம்பித்தவர்
   1. ஹஸனுல் பஸரி (றஹ்) 2. இப்னு அரபி 3. இப்னு ஸப்ஈன்
   4. வாஸில் பின் அதா 5. மஹ்பத் பின் காலித்

9. தற்காலிகத் திருமணம் என்பதைக் குறிக்கும் சொல்
   1. தகிய்யா 2. தீனா 3. நிகாஹுஸ் ஸஹீஹ் 4. ரஜ்ஆ 5. நிகாஹுல் முத்ஆ

10. “மு.்.மீன்களுக்குள்ளேயே இருந்து கொண்டு காபிர்களுக்கு ஆதரவாய் நிற்றல்” என்ற பண்பைக் கொண்டவர்
    1. முனாபிக் 2. காபிர் 3. முஷ்ரிக் 4. முர்தத் 5. ஷீஆ

11. கவாரிஜ்கள் தோன்றுவதற்கு ஏதுவான யுத்தம்
    1. ஜமல் யுத்தம் 2. நகர்வான் யுத்தம் 3. சிப்பீன் யுத்தம்
    4. யமாமா யுத்தம் 5. பத்ர் யுத்தம்

12. “வரஉ” என்பதன் கருத்து
    1. உளத்தூய்மை 2. அன்பு 3. பற்றற்ற வாழ்வு 4. பேணுதல் 5. பொருந்திக் கொள்ளல்

13. நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தாரைச் சுட்டிக்காட்டும் சொல்
1. அஹ்லுல் கிதாப்	2. அஹ்லுல் பைத்	3. உம்மஹாதுல் மு∴மினீன்
4. ஸஹாபாக்கள்	5. அஹ்லுல் பத்ரத்

14. எந்த ஒன்றுக்கும் படைப்பாளன் ஒன்று இருக்க வேண்டும் என்றால் கடவுளைப் படைத்தவன் யார்? என்ற வழிகெட்ட சிந்தனையை முன்வைத்த பகுத்தறிவாளர்.
1. டார்வின்	2. கார்ல்மாக்ஸ்	3. பேடன் ரஸல்	4. புரோய்ட்	5. மார்க்கோனி

15. மரணித்தவர்களிடம் உதவி தேடல் எனும் இணைவைத்தல் உள்ளடங்குவது
1. ஷிர்க் அல் கபி	2. ஷிர்க் அல் ஜெலி	3. ஷிர்க்குல் அஸ்கர்
4. நிபாக்குல் அக்பர்	5. நிபாக்குல் அஸ்கர்

16. “மஆத்” கோட்பாடு என்பது
1. அல்லாஹ் இருக்கிறான் என்பதை நம்புதல்	2. அல்லாஹ் ஒருவன் என நம்புதல்	3. கழாகத்ரை நம்புதல்
4. மறுமை உண்டு என நம்புதல்	5. நபிமார்களை நம்புதல்

17. மனிதனுக்கு எவ்வித செயல் சுதந்திரமும் கிடையாது எனக் குறிப்பிடுபவர்கள்
1. ஜபரிய்யா	2. அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்	3. கதரிய்யா	4. ஹவாரிஜ்	5. முர்ஜியா

18. அலி (ரழி) அவர்கள் காபிராகிவிட்டார் எனக் குறிப்பிடும். அகீதாவுக்கு முரணான பிரிவினர்
1. ஷீஆக்கள்	2. ஜஹமியாக்கள்	3. கதரிய்யாக்கள்	4. ஹவாரிஜ்கள்	5. முர்ஜியாக்கள்

19. நபிமார்களுக்கும், வலிமார்களுக்கும், வழங்கப்பட்டவைகள் முறையே
1. கராமாத், மு∴ஜிஸாத்	2. மு∴ஜிஸாத், கராமாத்	3. கனீமத் கராமாத்
4. மு∴ஜிஸாத், ஷபாஅத்	5. ஷபாஅத், ஹிதாயத்

20. மூஸா (அலை) அவர்களின் பிரச்சாரத்திற்கு எதிராக செயற்பட்டவன்
1. அபூ லஹப்	2. பிர்அவ்ன்	3. நும்ரூத்	4. அபூ ஜஹ்ல்	5. ஹாமான்

- **21 தொடக்கம் 25 வரையிலுள்ள ஒவ்வொரு வினாவிலும் வரும் சொற்களில் இரண்டு சொற்கள் இன்னும் இரண்டு சொற்களுடன் உடன்படும். உடன்படாது எஞ்சி வரும் சொல்லைத் தெரிவு செய்க.**

21. 1. யவ்முல் ஹஷ்ர்	2. ஹுதமா	3. யவ்முல் மீஆத்	4. தாருல் ஜலால்	5. ஹாவியா
22. 1. இல்ஹாத்	2. நிபாக்	3. முஷ்ரிக்	4. முனாபிக்	5. முல்ஹித்
23. 1. பிர்கதுன் நாஜியா	2. அஹ்லுல் அஸர்	3. முஹக்கிமா	4. ஹரூரிய்யா	5. வாஸிலிய்யா
24. 1. ஷாஹித்	2. மீக்காத்	3. இஹ்ராம்	4. ஆமில்	5. வலி
25. 1. முஹம்மது நபி (ஸல்)	2. ரூஹுல்லாஹ்	3. ஈஸா (அலை)	4. காத்தமுன் நபி	5. கலீலுல்லாஹ்

- **26 முதல் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் சில கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் பொருத்தமான கூற்றுக்களின் சேர்மானத் தொகுதியைத் தெரிவு செய்க.**

26. பின்வருவனவற்றுள் இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை உள்ளடக்கும் தொகுதி
A – இம்மை மறுமை இரண்டுக்கும் வழிகாட்டுகிறது.	B - உலகத்தை துறந்து வாழ வழிகாட்டுகிறது.
C – வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டுகிறது.	D – நெகிழாத் தன்மையைக் கொண்டுள்ளது.
E – அடிப்படை மூலாதாரங்களைக் கொண்டது.	F – மனித முயற்சியால் மட்டும் உருவானது.

1. A,B,C	2. A,C,E	3. B,C,D	4. B,D,F	5. C,D,E

27. இறைவன் பற்றிய நம்பிக்கைகளில் மிகச் சரியான கூற்று
A – அல்லாஹ்வுக்கு அழகு திருநாமங்களும், பண்புகளும் காணப்படுகின்றன.
B – தௌஹீத் அல் உலூஹிய்யா என்றால் பரிபாலிப்பவன்
C – அல்லாஹ்வின் ஸாத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்.
D – அல்லாஹ்வுக்கு வாஜிபான பண்புகள் காணப்படுகின்றன.
E – அல்லாஹ்வுக்கு ஒப்பாக எதுவுமே இல்லை
1. A,C,D	2. B,C,E	3. A,D,E	4. A,B ,C	5. B, C,D

28. உலக முடிவிற்கான அடையாளங்களில் பெரிய அடையாளங்களை சுட்டும் தொகுதி
A – அறிவை சுமந்த அறிஞர்கள் மரணித்தல்	B – அற்புதமான பிராணி வெளியாகுதல்
C – காலம் சுருங்குதல், கொலைகள் அதிகரித்தல்	D – ய∴ஜூஜ் ம∴ஜூஜ் கூட்டத்தினர் வெளியாகுதல்
E – தஜ்ஜால் வெளிப்பட்டு வருதல்
1. B,D,E	2. A,B,D	3. C,D,E	4. A,C,E	5. B,C,D

29. ஷிர்க்குல் அக்பரில் உள்ளடங்கும் தொகுதி அல்லாதது.
A – சந்திரனை வணங்குதல் B – வசியம் செய்தல்
C – அல்லாஹ் அல்லாதவற்றின் பெயரில் நேர்ச்சை வைத்தல் D – மரணித்தவர்களிடம் உதவி தேடல்
E – சகுனம் பார்த்தல்
1. A,D,E 2. B,C,D 3. C,D,E 4. A,C,D 5. B,C,E

30. ஈமானில் முரண்பட்ட சிந்தனைகள் தோன்றுவதற்கான காரணிகள்
A – அல்குர்ஆன் தொகுத்து நூலுருப்படுத்தப்பட்டமை
B – சுயநலமும், மனோ இச்சையும்.
C – பிறகலாசார தாக்கம்
D – இஸ்லாத்திற்கு எதிரான சதிகள்
E – நபியவர்களின் மரணத்தின் பின்னால் குலபாஉர்ராஷிதீன்கள் ஆட்சிப்பொறுப்பேற்றல்.
1. A,C,D 2. A,B,E 3. B,C,D 4. C,D,E 5. A,B ,D

31. ரஸூல்மார்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை பண்புகள்
1. பதானத், இஸ்மத், தப்லீக், கித்ப் 2. சீத்க், அமானத், பதானத், தப்லீக்
3. இஸ்மத், பதானத், மு.:.ஜிஸாத், குத்ரத் 4. சித்க், கராமத், இஸ்மத், பதானத்
5. ஹிதாயத், ரிஸாலத், மவ்துன், ஷபாஅத்

32. நயவஞ்சகர்களின் அடையாளங்களில் ஒன்று
1. மனோ இச்சைப்படி வாழுதல் 2. நன்மை, தீமை எதுவுமில்லை என கூறுதல்
3. தர்க்கித்தால் தீய வார்த்தைகள் பேசுதல் 4. நபி (ஸல்) அவர்களை இறுதி நபி என ஏற்றுக்கொள்ள மறுத்தல்
5. பெரும்பான்மையான ஸஹாபாக்களை தூற்றுதல்.

33. தீச்சுவாலையின் மூலம் படைக்கப்பட்டவர்கள்
1. நபிமார்கள் 2. ஜின்கள் 3. மனிதர்கள் 4. மலக்குகள் 5. மிருகங்கள்

34. தீவிரவாதம், மிதவாதம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் நடுநிலை போக்கை குறிப்பது.
1. வஸதிய்யா 2. இன்ஸானிய்யத் 3. ரப்பானிய்யத் 4. வாஸிலிய்யத் 5. ஹூரிய்யத்

35. ஸிராத்தையும் அதைக்கடந்து செல்வதையும் நிராகதிப்பவர்கள்
1. மு.:.தஸிலா 2. ஷீஆ 3. கவாரிஜ் 4. ஜபரிய்யா 5. வஹ்ததுல் வுஜூத்

36. நபி (ஸல்) அவர்களை பகிரங்கமாக சபித்தவர்
1. அபூஜஹ்ல் 2. உத்பா 3. ஷைபா 4. அபூலஹப் 5. வஹ்ஷி

37. பிரபஞ்சத்தை வளப்படுத்துவதற்கு மனிதன் பொறுப்பாக இருக்கிறான் என்ற சிந்தனையை விளக்குவது.
1. இபாதத் 2. இமாரத் 3. கிலாபத் 4. ஸலாமத் 5. ரிஸாலத்

38. "ஹுதன் லின்னாஸ்" என்ற பதம் குறிப்பது.
1. மனிதர்களுக்கான ஒளிவிளக்கு 2. மனிதர்களுக்கான அருட்கொடை 3. மனிதர்களுக்கான நேர்வழி
4. மனிதர்களுக்கான வெற்றி 5. மனிதர்களுக்கான பொக்கிஷம்

39. ஜாமிஉல் குர்ஆன் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் ஸஹாபி
1. உஸ்மான் (றழி) 2. அபூபக்கர் (றழி) 3. ஸைத் பின் ஸாபித் (றழி)
4. உமர் (றழி) 5. அலி (றழி)

40. இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாட்டை சுருக்கமாக்கித் தரும் கலை
1. இல்முல் அகீதா 2. இல்முல் பிக்ஹ் 3. இல்முல் ஈமான்
4. இல்முல் ஜராஇம் 5. இல்முல் மீராஸ்

- **41-45 வரையான ஒவ்வொரு வினாவிலும் X,Y எனும் நிரல்களின் கீழ் தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் ஒருவகையில் ஒன்றுடனொன்று தொடர்புடையவை. அதன்படி X நிரலில் உள்ளவற்றை Y நிரலில் உள்ளவற்றுடன் சரியாக தொடர்புபடுத்தும் போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தை தெரிவு செய்க.**

41.

| X | Y |
|---|---|
| 1. குகைவாசிகள் | A – அந்நஹ்ல் |
| 2. பெண்கள் | B – கஹ்ப் |
| 3. கவிஞர்கள் | C – அல்பகரா |
| 4. பசு | D – அஷ்ஷுஅரா |
| 5. தேனீ | E – அந்நிஸா |

1. BEDCA 2. BEADC 3. BECAD 4. BAEDC 5. BEACD

42. X | Y

1. வாஜிபாத் — A – பர்ளு கிபாயா
2. பர்ளுஐன் — B – கைரு மத்லுவ்
3. வஹிமத்லுவ் — C – முஸ்தஹீலாத்
4. ஹுகூகுல்லாஹ் — D - ஷிர்க் அல் கபி
5. ஷிர்க் அல் ஜலி — E - ஹுகூகுல் இபாத்

1. CDEAB 2. BCDEA 3. ABCDE 4. CABED 5. ACBED

43. X | Y

1. அபூபக்கர் (றழி) — A – ஜமல் யுத்தம்
2. முஹம்மத் நபி (ஸல்) — B – கர்பலா
3. அலி (றழி) — C – யமாமா
4. ஹுஸைன் (றழி) — D – பத்ர் யுத்தம்
5. உமர் (றழி) — E – பாரசீக வெற்றி

1. CDABE 2. BCEDA 3. DCBAE 4. ABDEC 5. CDEBA

44. X | Y

1. அல்குர்ஆன் படைக்கப்பட்டது — A - ஷீஆ
2. பெரும்பாவம் செய்தவர்கள் காபிர்கள் — B – அஹ்லுஸ் ஸுன்னா
3. மறுமையில் அல்லாஹ்வை பார்க்க முடியும் — C – கதரிய்யா
4. இமாம்கள் மஃசூம்கள் ஆவர் — D – முஃதஸிலா
5. மனிதனின் நாட்டப்படியே அனைத்து செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. — E – கவாரிஜ்

1. EABCD 2. DEBAC 3. ABCDE 4. DECBA 5. DAEBC

45. X | Y

1. தஸ்கியா — A - இறைப்புகழ்ச்சி
2. தஹ்மீத் — B – நம்பிக்கை
3. இஜ்திஹாத் — C – முன்னைய ஷரீஆதீர்ப்புக்கள்
4. ஈமான் — D – உளத்தூய்மை
5. ஷராயிஃ ஸாபிகா — E – முயற்சி

1. BCDEA 2. DECBA 3. DAEBC 4. EBCAD 5. ABDEC

- **46 – 50 வரையுள்ள வினாக்களில் இரண்டுவகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்களுக்குப் பின்வரும் (1) (2) (3) (4) (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதை தெரிவு செய்து அதன் இலக்கத்தை குறிப்பிடுக.**

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 1 | சரியானது | சரியானது |
| 2 | சரியானது | பிழையானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது. |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| 46. | ஈமானும், அமலும் ஒன்றோடொன்று பிணைந்திருக்க முடியாதவை | பர்ளுஐன், பர்ளு கிபாயா எல்லோராலும் தனித்தனியாக கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டியவை | ( ) |
| 47. | இல்ஹாத் கோட்பாடு இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் காணப்பட்டது. | அப்துல்லாஹ் இப்னு உபை முனாபிக்குகளில் ஒருவனாவான் | ( ) |
| 48. | சூபிகள் ஷரிஅத்திற்கு அப்பால் அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைய முயற்சித்ததால் வஹ்ததல் ஷுஹூத் எனும் பிரிவினர் தோன்றினர் | இப்னு அரபி என்பவர் புதூஹாதுல் மக்கி எனும் நூலை எழுதினார் | ( ) |
| 49. | ஈமான் அதிகரிக்கும் போது நல்ல மனவெளுச்சிகள் உள்ளத்தில் மேலோங்குகின்றன. | ஈமான் கொண்ட ஒருவர் ஏழைகளைக் காணும் போது அவரது உள்ளத்தில் அன்பு எனும் மனவெழுச்சி மேலெழுகிறது. | ( ) |
| 50. | மனிதன் பொறுப்புக்களைச் சுமந்தவன் அதற்கு வகை கூறக் கடமைப்பட்டவன் | வளப்படுத்தும் பணியில் ஈடுபடுதல் கிலாபத் ஆகும். | ( ) |

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

**Provincial Department of Education - NWP**

44 T II

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018

**First Term Test - Grade 12 - 2018**

சுட்டெண் : ........................

இஸ்லாம் II
Islam II

காலம் : 3 மணி

- **பகுதி i இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி ii இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளி உரித்தாகும்**

## பகுதி – I

1. தௌஹீத் பற்றி பின்வரும் விடயங்களை விளக்குக.
   (அ) தௌஹீத் ருபூபிய்யா
   (ஆ) தௌஹீத் உலூஹிய்யா
   (இ) தௌஹீத் அஸ்மா வஸ்ஸிபாத்
   (ஈ) அல்லாஹ்வின் ஸாத்தும் ஸிபாத்தும்

2. மறுமை நாளுடன் தொடர்பான பின்வரும் விடயங்களை விளக்குக.
   (அ) மஹ்ஷர்
   (ஆ) ஷபாஅத்
   (இ) சுவர்க்க வாழ்வு
   (ஈ) நரக வாழ்வு

3. பின்வரும் சிந்தனைப்பிரிவுகள் பற்றி சுருக்கமாக விளக்குக
   (அ) ஷீஆக்களின் தோற்றம்
   (ஆ) ஷீஆக்களின் உட்பிரிவுகள்
   (இ) மு.ஃதஸிலாக்களின் தோற்றம்
   (ஈ) மு.ஃதஸிலாக்களின் கோட்பாடுகள் அஹ்லுஸ்ஸுன்னா வல் - ஜமாஅத்தினருக்கு முரண்படும் விதம்

## பகுதி -II

4. (அ) இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை விபரிக்குக.
   (ஆ) அல்லாஹ்வின் பிரதிநிதி என்றவகையில் மனிதன் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை விபரிக்குக.

5. (அ) இஸ்லாத்தில் நற்பண்புகளின் முக்கியத்துவம் பற்றி விளக்குக..
   (ஆ) ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் பற்றி விளக்குக.

6. ஷிர்க் பற்றி பின்வருவனவற்றை விளக்குக.
   (அ) ஷிர்க்கின் விளைவுகள் (ஆ) ஷிர்கின் வகைகள்

7. (அ) மஹப்பதுர்ரஸூல் பற்றி ஆதாரங்களுடன் விளக்குக.
   (ஆ) வாழ்வு பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளக்குக.

8. (அ) நிபாக் என்றால் என்ன? அதன்வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.
   (ஆ) மதச்சார்பின்மை தோன்றி வளர்வதற்கு ஏதுவான காரணிகளை விபரிக்குக.

## முதலாந் தவணைப் பரீட்சை
## இஸ்லாம் I - Islam I - தரம் 12 - 2018
## விடைகள்

| வினா | இல | வினா | இல | வினா | இல | வினா | இல | வினா | இல |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 11 | 3 | 21 | 4 | 31 | 2 | 41 | 1 |
| 2 | 5 | 12 | 4 | 22 | 3 | 32 | 3 | 42 | 4 |
| 3 | 1 | 13 | 2 | 23 | 5 | 33 | 2 | 43 | 1 |
| 4 | 2 | 14 | 3 | 24 | 4 | 34 | 1 | 44 | 2 |
| 5 | 3 | 15 | 1 | 25 | 5 | 35 | 3 | 45 | 3 |
| 6 | 5 | 16 | 4 | 26 | 2 | 36 | 4 | 46 | 3 |
| 7 | 2 | 17 | 1 | 27 | 3 | 37 | 2 | 47 | 4 |
| 8 | 4 | 18 | 4 | 28 | 1 | 38 | 3 | 48 | 1 |
| 9 | 5 | 19 | 2 | 29 | 5 | 39 | 1 | 49 | 5 |
| 10 | 1 | 20 | 2 | 30 | 3 | 40 | 1 | 50 | 2 |

## பகுதி II விடைகள்

## பகுதி I

01. அ) தௌஹீத் ருபூபிய்யா

- சொல் விளக்கம் றப்பு என்ற சொல்லிலிருந்து பிறந்தது.
- பொருள் விளக்கம் இரட்சகன், ஆளுபவன், பராமரிப்பவன், படைப்பவன், போசிப்பவன், சொந்தக்காரன் முதலான கருத்துக்களைத் தருகிறது.
- அல்லாஹ்வை அகிலத்தின் படைப்பாளனாகவும், போசிப்பவனாகவும் இரட்சித்துக் காப்பவனாகவும் திட்ட மிடுபவனாகவும் நன்மைக்கும் தீமைக்கும் பொறுப்பானவனாகவும் மனிதனின் உயர்வு, தாழ்வுக்குப் பொறுப்பானவனாகவும் ஏற்றுக்கொள்வதே ருபூபிய்யத் எனப்படும்.
- இது கோட்பாடு சார்ந்த தௌஹீத்தாகும்.
- அல் - குர்ஆன், ஹதீஸ் விளக்கம். இது பற்றிய ஜாஹிலிய்யாக் கால மக்கள் கூறியவை

ஆ) தௌஹீத் உலூஹிய்யா

- சொல் விளக்கம், இலாஹ் என்ற சொல்லிலிருந்து பிறந்தது.
- பொருள் விளக்கம். வணங்கி வழிபடத் தகுதியானவன். இலாஹுக்குரிய முழுப் பண்புகளும் அவனிடமே உள்ளன. அவனே வணங்கி வழிபடத்தக்கவன்.
- இது நடைமுறைசார்ந்த தௌஹீதாகும்.
- அல்லாஹ்வை நம்பி வழிபடல் என்பதாகும்.
- அல் - குர்ஆன், ஹதீஸ் ஆதாரம் ஜாஹிலிய்ய மக்கள் அல்லாஹ்வை இலாஹாக ஏற்கத் தயங்கியமை

இ) தௌஹீத் அஸ்மா வஸ்ஸிபாத்

- அஸ்மா ஸிபாத் சொல் விளக்கம்
- அஸ்மா உல் ஹுஸ்னா 99 இருக்கின்றமை
- ஸிபாத் 20+20+1 இருக்கின்றமை. இதன் வகைகள்
- இவை பற்றிய அல் - குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள்
- தௌஹீத் உலூஹிய்யா, ருபூபிய்யாவுடன் இதுவும் இணையும் போதே தௌஹீத் முழுமை பெறல்.

ஈ) அல்லாஹ்வின் ஸாதும் ஸிபாத்தும்

- ஸாத், ஸிபாத் சொல் விளக்கம்
- அல்லாஹ்வுக்கு ஸாத் உண்டு, ஸிபாத்களும் உள்ளமை.
- இஸ்லாம் ஸாத்பற்றி சிந்திக்காது அவனது படைப்புக்கள் பற்றி சிந்திக்கத்தூண்டியுள்ளமை
- அல்லாஹ்வின் ஸாத் பற்றி சிந்தித்தவர்கள் வழிதவறியுள்ளமை
  உதாரணம் : முஜஸ்ஸிமாக்கள், நாஸ்திகர்கள்

02. அ) மஹ்ஷர் : மஹ்ஷர் சொல் விளக்கம், ஹஷ்ர் என்பதிலிருந்து வந்தது.

- மஹ்ஷர் மைதானம் பற்றிய விளக்கம், நிகழ்வுகள்
- நபிமார்களிடம் சென்று மன்றாடுதல் - ஆதாரங்கள்

ஆ) ஷபாஅத் : நபி (ஸல்) அவர்களது ஷபாஅத்தும், அதற்குத்தகுதியானவர்களும்.

- அல் - குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள்
- ஷபாஅத்தின் வகைகள்

இ) சுவர்க்க வாழ்வு :

- சுவர்க்கம் செல்வதற்கான தகைமைகள் பற்றிய விளக்கம்.
- சுவர்க்கத்தின் வகைகள்
- இவை பற்றிய அல் - குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள்
- சுவன இன்பங்கள் பற்றிய சிறு விளக்கம்.

ஈ) நரகவாழ்வு :

- நரக வாழ்வுக்குத் தகுதியானவர்கள்
- இதன் வகைகள்
- நரகக்காட்சிகள் பற்றிய அல் - குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள்

03. அ) ஷீஆக்களின் தோற்றம்

- ஷீஆ என்ற சொல் விளக்கம், பிரிவு, கூட்டம், ஆதரவு, அணி
- நபி (ஸல்) அவர்களது அரசியல் வாரிசு அலியே என்ற சிந்தனை
- உஸ்மான் (றழி) அவர்களின் கொலையைத் தொடர்ந்து இக்கருத்து வலுப்பெற்றமை
- அப்துல்லாஹ் இப்ன் ஸபாவின் சதிகள்
- கர்பலா சம்பவமும் அதனைத் தொடர்ந்த செயற்பாடும்.
- வரலாற்றில் ஷீஆ பிரிவினர் எனும் பெயர் காணப்படல்

ஆ) ஷீஆக்களின் உட்பிரிவுகள்

- தமக்குள் ஏற்பட்ட கருத்து முறன்பாடுகளே காரணம்
- இவர்களுக்கு மத்தியில் 70 மேற்பட்ட உட்பிரிவுகள் காணப்படுகின்றமை
- அவற்றுள் இஸ்னா அஸரிய்யா, இஸ்மாயிலிய்யா, பாத்தினிகள், ஸைதிக்கள், நுஸைரிகள் பற்றிய சிறு விளக்கம்

இ) மு.ஃ.தஸிலாக்களது தோற்றம்

- மு.ஃ.தஸிலா சொல் விளக்கமும், பிரயோகமு்
- அவர்கள் தோன்றிய பின்னணி, இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) வாஸில் பின் அதா
- இவர்களது சிந்தனைகள்
- அரச கொள்கையாக பிரகடனப்படுத்தப்படல், கலீபா ம.ஃமூன்

ஈ) மு.ஃ.தஸிலாக் கோட்பாடு அ.சு.வ.ஜ முரண்படும் விதம்

- பெரும்பாவம் செய்தவனின் விடயத்தில் முறண்படும் விதம்
- தௌஹீத் விடயம், நீதி, இரு நிலைக்கிடைப்பட்டநிலை வாக்குறுதியும் தண்டனையும், நன்மையை ஏவித்தீமையைத் தடுத்தல் என்றவாறு சுன்னத் வல்ஜமாஅத்தினரை முரண்படும் விதம் விளக்கப்படல்.

## பகுதி II

04. அ) ரப்பானிய்யா, ஷுமூலிய்யா, வாசிஇய்யா, வஸதிய்யா, ஸபாத்வல் முறூனா, ஆலமிய்யா, தவாஸுன் என்பவற்றை வரலாற்று ரீதியாகவும் உதாரணங்களுடனும் விளக்கியிருத்தல் (10 புள்ளிகள்)

ஆ) அல்லாஹ்வின் பிரதி நிதி என்றவகையில் இபாதத், கிலாபத், இமாரத் என்பவற்றை விரிவாக விளக்கி எழுதியிருப்பின் (அல் - குர்ஆன், அல் - ஹதீஸ் ஆதாரங்களுடன்) (10 புள்ளிகள்)

05. அ) நற்பண்புகள் சொல் விளக்கம்

- நற்பண்புகள் பற்றிய அல் - குர்ஆன், அல் - ஹதீஸ் ஆதாரங்கள்
- கடமைகளை அல்லாஹ் நற்பண்புகளை வளர்பபதற்காகவே கடமையாக்கியுள்ளமை, உதாரணங்கள்
- இவை இரு உலகிலும் பயன்படும் முறைபற்றிய விளக்கம்
- நற்பண்புகள் உலக சமநிலையைப் பேணுகின்றமை (10 புள்ளிகள்)

ஆ) ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் சொல் விளக்கம்

- ஹக் என்பதன் பன்மை ஹுகூக் என்பதாகும்.
- ஹுகூகுல்லாஹ்வில் உள்ளடங்கும் அம்சங்கள்
- இவை பற்றிய சட்ட விதிகள்
- உதாரணங்கள்
- ஹுகூகுல் இபாதின் உள்ளடக்கம்

- இவை பற்றிய சட்ட விதிகள், இம்மை, மறுமை வாழ்வில் ஏற்படும் அம்சங்கள்
- அல் - குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள் (10 புள்ளிகள்)

06.. அ) ஷிர்க் சொல் விளக்கம் - வரைவிலக்கணம்

இது பற்றிய அல் - குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள்

ஷிர்க்கினால் ஏற்படும் இம்மை மறுமை பாதிப்புக்கள் பற்றி விளக்கி எழுதியிருப்பின் (10 புள்ளிகள்)

ஆ) ஷிர்கின் வகைகள், சொல் விளக்கம், வரைவிலக்கணம்.

- பெரிய வகை ஷிரக் - சிறிய வகை ஷிர்க்
- பெரிய வகை - ஷிர்க் ஜலி, ஷிர்க் கபி என வகைப்படல். இவை இரண்டுக்குமான உதாரணங்கள்
- சிறிய வகை ஷிர்க்குக்கு உதாரணங்கள்
- அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தல்
- நூல், வளையம் கட்டுதல்
- தாயத்துக்கட்டுதல் அல்லாஹ் அல்லாதவற்றுக்கு அறுத்துப் பலியிடல்
- மந்திரித்தல், வசியம் செய்தல், சூனியம் செய்தல், சகுனம் பார்த்தல்
- முகஸ்துதி போன்றவற்றை ஆதாரங்ளுடன் விளக்கியிருப்பின் (10 புள்ளிகள்)

07. அ) மஹப்பா என்பதன் கருத்து விளக்கம்

- மஹப்பதுர்ரஸூல் என்பது பற்றிய விளக்கம்
- இதுபற்றிய ஆதாரங்கள்
- நபியவர்கள் மீது அன்பு கொள்ள ஏதுவான காரணிகள்
- இவ்விடயத்தில் ஸஹாபாக்களது முன்மாதிரிகள்
- ஸஹபாக்கள் நபியவர்களை முழுமையாகப் பின்பற்றியமை பற்றி விரிவாக விளக்கியிருப்பின் (10 புள்ளிகள்)

ஆ) வாழ்வு என்பதன் கருத்து விளக்கம்.

- வாழ்வின் நோக்கம் பற்றி விளக்கல். "உங்களில் எவர் செயல்களில் சிறந்தவர் ........... (67.02) என்றவகையில்
- உலகம் ஒரு சோதனைக் களம்
- சமநிலையான வாழ்வை அமைத்துக் கொள்ளல்
- அனைத்தும் மனிதனுக்காகப் படைக்கப்படலும் மனிதன் அல்லாஹ்வுக்காக படைக்கப்படடிருத்தலும்
- மனித ஆத்மா பாதிகிகப்படாதவகையில் வாழ்வை அமைத்தல்
- இவை பற்றிய அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் ஆதாரங்களுடன் விளக்கி எழுதப்பட்டிருப்பின் (10 புள்ளிகள்)

08. அ) நிபாக் எனும் சொல் விளக்கம்

- இஸ்லாமிய வரைவிலக்கணம்
- நிபாக் தௌஹீதுக்கு முரணானது என்ற வகையில் விளக்கம்
- நிபாகின் இருவகைகளும், பெரியவகை, சிறிய வகை
- பெரியவகை நிபாக் பற்றிய விளக்கம். இதன் 9 பண்புகள்.
- சிறிய வகை நிபாக்கின் அடையாளங்கள்
- இவை பற்றிய அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் ஆதாரங்கள் (10 புள்ளிகள்)

ஆ) மதச்சார்பின்மை என்பதன் கருத்து

- இவ்வாறான சிந்தனை தோன்றி வளர்வதற்கான காரணிகள்
- 1. சமயங்களுக்கிடையிலும், சமயங்களுக்குள்ளும் காணப்படும் முரண்பாடுகள்
- 2. சமய மூட நம்பிக்கைகள்
- 3. சமயங்கள் அறிவுபூர்வமான கருத்துக்களை தவிர்த்தமை
- 4. சமயங்கள் கண் மூடித்தனமாக அறிவியற் கோட்பாடுகளை எதிர்த்தமை
- 5. நாத்திக நம்பிக்கையில் காணப்பட்ட சுதந்திரம்
- 6. நாத்திகத்தின் பின்னணியில் ஏற்பட்ட அபிவிருத்திகள்
- இவை போன்ற கருத்துக்கள் விளக்கப்படிருப்பின் (10 புள்ளிகள்)


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න